# ஐங்குறுநூறு – முல்லைவாழ் மக்கள்

***முனைவர் அர. சுதா***
தமிழ்த்துறை
கோவை கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை
https://doi.org/10.5281/zenodo.14383226

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கிய நூல்களில், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக ஐங்குறுநூறு இடம் பெறுகின்றது. ஐங்குறுநூற்றில் அமைந்துள்ள ஒவ்வொரு திணையைச் சார்ந்த நூறு பாடல்களும் ஐந்து வேறு புலவர்களால் இயற்றப்பட்டதாகும்.*

*பேயனார் எழுதிய ஐங்குறுநூற்றில் முல்லைத்திணைப் பாடல்கள் பத்து தலைப்புகளில் பத்து, பத்து பாடல்களாக மொத்தம் நூறு பாடல்களாக அமைந்துள்ளன. குறிப்பாக காதல் உணர்வுகளையும் நயம்படக் கூறும் செய்யுட்களை உடையது.*

*ஐங்குறுநூற்றில் பத்துப்பிரிவுகள் உள்ளன. அப்பத்துப் பருவங்களில் மக்களின் வாழ்க்கை முறை, காதல் ஒழுக்கம், இல்லறப் பண்பு, தலைவன், தலைவியின் உள்ளப்பாங்கு, பாணன,ீ பாங்கியின் செயல்பாடுகள் கார்காலச் செயல்பாடுகள் போன்றவற்றை இவ்வாய்வு கட்டுரை விளக்குகிறது.*

*ஐங்குறுநூற்றில் முல்லைத்திணையில் 1. செவிலி கூற்றுப் பத்து 2.கிழவன் பருவம் பத்து 3. விரவுப் பத்து 4. புறவணிப்பத்து 5.பாசறைப்பத்து 6.பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து 7.தோழி வற்புறுத்தப்பத்து 8.பாணன்பத்து 9.தேர்வியங் கொண்ட பத்து 10.வரவுச் சிறப்புரைத்த பத்து என்ற பத்து பருவங்களில் கூறப்பட்டுள்ள தலைப்புகளின் அடிப்படையில் கார்கால நிகழ்வு, பருவம் நீட்டித்து வரும் தலைவனின் மனப்பாங்கு, தலைவன் கூறிச் ீ சென்ற காலத்தில் வராமையால் தலைவியின் மனப்பாங்கு போன்ற அடிப்படையில் இக்கட்டுரையின் கருத்துக்கள் அமைகின்றன.*

*இக்கட்டுரையின் வாயிலாக முல்லை நிலங்களின் முதல், கரு, உரிப்பொருட்களின் தன்மையினையும், மக்களின் அக வாழ்வின் அமைதிகள் அவற்றிற்கு உரியவான சூழ்நிலை அமைதிகளையும், முல்லை நில மக்களின் ஒழுக்கத்தின் தன்மைகளையும் அறிந்து கொள்ளும் வகையில் முல்லைத்திணை அமைந்துள்ளது என்ற கருத்தின் அடிப்படையில் இக்கட்டுரையின் கருத்தானது அமைந்துள்ளது.*

**முன்னுரை**

*சங்க கால மக்கள் வாழ்ந்த வாழ்வைத் தெளிவாகப்படம்பிடித்துக்காட்டும் ''காலக் கண்ணாடிகள்'' சங்க இலக்கியங்கள். தமிழ் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை இயற்கைப் பிரிவுகளோடு ஒன்றி வாழ்ந்தனர். பண்டைத் தமிழ் மக்கள் அன்பைப் பண்பாகவும், அறத்தைப் பயனாகவும் கொண்டு வாழ்வை நடத்தினர் என்ற கருத்தில் இக்கட்டுரையின் கருத்து அமைகிறது.*

**ஐவகை நிலங்கள்**

1. *குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்*
2. *முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்*
3. *மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்*
4. *நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்*
5. *பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்*

**ஐங்குறுநூறு**

*ஐங்குறுநூறு எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாகும். இது மூன்றடி சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் ஆகும். மற்றத் தொகை*

நூல்களின் பாக்களைக் காட்டிலும் அடிவரையறைக் குறைந்த நூறு பாக்களால் ஆனது. இந்நூல் ஐந்திணை ஒழுக்கங்களைச் செப்பமுறத் தனித்தனியே சிறப்பிக்கின்றமையால் ஐங்குறுநூறு என்ற பெயர் பெற்றது. அகவற் பாக்கால் ஆனது.

**முல்லை நிலம் - உரி, கருப்பொருள்**

உரிப்பொருள் - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

1. நிலம் - காடும் காடு சார்ந்த இடமும்
2. பொழுது - பெரும்பொழுது - கார்காலம்- சிறுபொழுது - மாலை

**கருப்பொருள்**

1. தெய்வம் - திருமால்
2. உயர்ந்தோர் - நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி
3. தாழ்ந்தோர் - இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
4. உணவு - வரகு, சாமை, முதிரை
5. புள் - காட்டுக்கோழி
6. விலங்கு - மான், கோழி
7. ஊர் - பாடி,சேரி
8. நீர் - குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்
9. பு - முல்லைப்பு, குல்லைப்பு, தோன்றிப்பு, பிடவம்
10. மரம் - கொன்றை, காயா, குறுந்தம்
11. பறை - ஏறங்கோட்பறை
12. யாழ் - முல்லையாழ்
13. பண் - சாதாரி
14. தொழில் - சாமை விதைத்தல், வரகு விதைத்தல்

அவற்றில் களை எடுத்தல், அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், கால் நடைகளை மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறு ஆடல்.

**ஐங்குறுநூறு முல்லை நிலம்**

ஐங்குறுநூறில் முல்லை நில ஆசிரியர் பேயனார். முல்லை நிலத்து மக்களின் பல்வேறு தன்னைகளையும், குறிப்பாகக் காதல் உணர்வுகளையும் நயம்பட வடித்து நூறு செய்யுட்களைக் கொண்டது. அடி அளவாலும் இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. பொருள் - அகப்பொருள். அளவு - குறுமை. பாக்கள் மூன்றடி சிற்றெல்லையும் ஆறு அடி பேரெல்லையும் உடையது. ஐங்குறுநூற்றில் முல்லை நிலத்தைப் பற்றி பத்து பருவங்கள் கூறப்பட்டுள்ளன. அவை. 1. செவிலி கூற்றுப் பத்து 2.கிழவன் பருவம் பத்து 3.விரவுப் பத்து 4. புறவணிப்பத்து 5.பாசறைப் பத்து 6.பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து 7.தோழி வற்புறுத்தப்பத்து 8.பாணன்பத்து 9.தேர்வியங் கொண்ட பத்து 10.வரவுச் சிறப்புரைத்த பத்து என்பனவாகும்.

**செவிலி கூற்றுப்பத்து - இல்லறப் பண்புகள்**

முதல் பத்துப்பாடல்கள் செவிலி கூற்று ஆகும். தலைவியின் இல்லற வாழ்வை மகிழ்வோடு, தலைவி நற்றாய்கு அழகாகக் குறிப்பிடுகிறாள்.

குட்டி மானை இடையிலே படுக்கும்படியாகவும் ஆண்மானும், பெண்மானும் அதன் இருபுறமும் படுத்திருக்கும் காட்சியினை நீபாராய். இவை போலவே தலைவனும் தலைவியும் தன் மகனை நடுவில் கிடத்தி உறங்குவது இனிய காட்சியாகும். இத்தகைய இன்பத்தைக் காண்பது. சினமே இல்லாமல் நில நிற வானத்தில் வாழும் தேவரும் இவர்களைப் போல இன்பம் பெற முடியாது. என்பதனை,

**''மறி இடைப்படுத்த மான் பிணை போல**
**புதல்வன் நடுவணன் ஆக,நன்றும்**
**இனிது மன்றவர் கிடக்கை முனிவின்றி ..''**

**(முல்லை - 401)**

என்ற பாடலில் அறியலாம்.

தலைவி மகனைத் தழுவிக் கொண்டு படுத்திருக்கிறாள். தலைவன் அவள் முதுகைத் தழுவிக் கொண்டு படுத்திருக்கிறான். இக்காட்சியானது பாணர் கையில் யாழைத் தழுவியிருப்பது போல இனிமையாக உள்ளது. இதனை,

**''புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி**
**நசையினன் வதிந்த கிடக்கை போல''**

**(முல்லை - 402)**

என்ற பாடலால் உணரலாம். இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

**''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''**

**(திருக்குறள் - 65)**

## கிழவன் பருவம் பாராட்டுப் பத்து - இளமை இனிது

பிரிந்து சென்ற தலைவன் தான் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வரும் முன்னர் மீண்டு வந்து, தலைவியை நோக்கிப் பொன்னைப் போல் கொன்றையும் நீல மணிபோல் காயாவும் புத்து குலுங்குகின்றன. அதோ புக்களில் வண்டுகள் தேனுண்டு இனிமையாகப் பாடுகின்றன. ஆண்யானையானது, பெண் யானையின் உறவை நாடுகின்றது என இனிய முல்லை நிலத்தின் கார் கால நிகழ்வுகளைக் கூறி, நாமும் இன்பம் நுகர்வோம் என்பதனை,

**''இதுவே மடந்தை! நாம் மேவிய பொழுதே**
**இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே!**

**(முல்லை - 415)**

என்ற பாடலில் பேயனார் இளமை நுகர்வார்க்கு இனிது என்று கூறியுள்ளார்.

## விரவுப்பத்து - தலைவியின் வருத்தம்

வலிமை மிக்க சக்கரம் கொண்டதும், விரைந்து பாயும் குதிரை புட்டியதுமான தேரை, நீண்ட கொடியில் புத்திருக்கும் முல்லையும், தளவமும் உதிரும்படி விரைந்து செலுத்தி நாம் சென்றால் முன்னங்கையில் வளையல்கள் நிறைந்த அவள் வருந்த மாட்டாள். என்ற கருத்தினை,

**''கடும்பரி நெடுந்தேர்க் காவல் பரலி**
**நிறைவளை முன்கை வருந்தலோ இலளே''**

**(முல்லை - 422)**

என்ற பாடல் முல்லை நிலத்திற்கான பல துறைச் செய்திகளைக் கொண்டதாய் அமைந்திருக்கின்றன.

## புறவணிப்பத்து - சுரவழி

பிரிவுக்கு உடன்பட்டாலும் தலைவி, தலைவன் செல்லும் வழி அரிது என ஆற்றாதவளாய்க் கூற, கார்காலத்தில் சுரம் வழி நன்றே என்று கூறும் பத்து'ப் பாடல்களின் தொகுப்பே புறவணிப்பத்'தாகும்.

நம் காதலர் சென்ற வழியானது, நிலத்துக்கு அணி செய்யும். நெய்தற் புக்கள் மலர, பொன் போல் அழகிய கொன்றையும், பிடவமும் உடையதாகலின், போதற்கு மிக இனிய வழியாகும். இதனை,

**''நன்றே காதலர் சென்ற ஆறே!**
**நிலன் அணி நெய்தல் மலர்ப்**

**(முல்லை - 435)**

என்ற பாடலால் அறியலாம்.

## பாசறைப்பத்து - பிணி நீங்கக் காண்போம்

தலைவன் போர் செய்தற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்று பாசறை இடத்தில் இருந்து தன் நெஞ்சுக்குக் கூறிய கூற்றாக பாசறைப்பத்து அமைந்துள்ளது. பனியாலே வளர்ச்சியடையும் செம்முல்லையானது, சிச்சிலிப் பறவையின் வாயைப் போல விளங்கும் சிவந்த அரும்புகளை, அசைகின்ற சிறகுகளையுடைய வண்டுகள் பொய்த்துப் பிணியவிழ்ந்து விடுதலைப் பெற்றதாகும். அவ்வாறாயின் வாணுதலேயாகும். பிணியகன்று வீடு அடைவோம் என்பதை,

**''ஆடு சிறைவண் டவிழ்ப்ப**
**பாடுசான்ற, காண்கம் வாண் நுதலே''**

**(முல்லை - 447)**

என்ற பாடல் உணர்த்துகின்றது.

## பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து - இல்லாலின் துயரப் புலம்பல்

'வினையே ஆடவர்க்குயிர்'' (குறுந்தொகை) என்ற கருத்திற்கேற்ப வினையினால் பிரிந்த தலைவன் மீண்டு வரக் குறிப்பிட்ட பருவம் வந்தும், வாராமையால் தலைவியின் கூற்றாக அமைந்த பத்துப்பாடல்களாகும்.

நம் காதலர் மிகுதியாக பெய்கின்ற பனி வருத்துவதால் தாங்காமல் வழியின்றி குருகும் நீர்ப் பறவைகளும் ஆராவாரிப்பதற்கு காரணமாக குளிர்ப் பருவத்தே நம்மைக் கைவிட்டுப் பாசறைக்குச் சென்றார். அவ்வாறிருந்தும் என் அறியாமை

நிறைந்த என் மனம் அவரை மறந்து அமைதியடையவில்லை என்பதனை,

***''பெய் பனி நலிய உய்தல் செல்லாது***
***குறுகினும் நரலும் பிரிவருங் காலத்''***

***(முல்லை - 457)***

என்ற பாடலில் அறியலாம்.

**தோழி வற்புறுத்தப்பத்து**

தலைவனின் பிரிவைத் தாங்காது வருந்தும் தலைவியை பல்வேறு வகையில் தோழி ஆற்றுவித்துக் கூறுதல்.

''பருவமன்று'' என மறுத்தும் அவர் ''சொற்பிழையார்'' என் வலியுறித்தியும் அவர் ''மாறா அன்பினர்'' என்று உறுதி கூறி, அவர் வந்து திருமணம் செய்வார் என்று வற்புறுத்திச் சொல்லியும், தலைவியின் ஆற்றாமையைப் போக்கும், தோழியின் செயல்பாடுகளை,

***''பைந்தினை உணங்கல் செம்புழ் கவரும்***
***காண்குவம் வம்மோ, புங்க ணோயே''***

***(முல்லை - 469)***

என்ற பாடலடிகளில் உணரலாம்.

**பாணன்பத்து**

பாணன் கூற்றாக வரும் பத்துப்பாடல்கள் அமைந்த பகுதியாகும். முல்லைப் பண்ணை இனிதாக இசைக்கின்ற நல்ல யாழினையுடைய, பாணனே! நான் விரும்பும் காதலியானவள், நான் பிரிவுக் காலத்தை நீட்டித்தோம் என்று என்னைக் கொடுமையிழைப்பவன் என சொல்லித் தூற்றியவளாக, வாடிய நெற்றியினளாகத் தான் வாழ்வதை வெறுத்து விட்ட நினைவினளாகி, நோய் மிகவாக மெலிவுற்றவள் சொல்லியவற்றை, நீயும், எனக்குச் சொல்வாயாக, என்ற கருத்தை,

***''யாம்வெம் காதலி நோய்மிகச் சாஅய்ச்***
***சொல்லிய துரைமதி, நீயே''***

***(முல்லை - 478)***

என்ற வரிகளால் அறியலாம்.

**தேர்வியங்கொண்ட பத்து**

தலைவியைப் பிரிந்த தலைவன், தலைவியைக் காண்பதற்குப் பெரிதும் விரும்பி பாகனை நோக்கித்தின் தேரினை விரைந்து செலுத்தும்படி கூறிய பாடல்களின் தொகுப்பாகும்.

காதலரைப் பிரிந்தோர் அவரை நினைத்தேங்கிப் பெரிதும் வருந்தும் நேரம். ஆதலால் அறிவுடைய பாகனே! செறிந்துள்ள தொடியணிந்தவளாகிய என் தலைவியின் உள்ளம் மகிழ்ச்சியடையுமாறு யாம் இன்றே ஊர் சென்று சேர்வதற்கு உதவியாகத் தேரையும் விரையச் செலுத்துவாயாக என்பதை,

***''இதுமற் பிரிந்தோர் உள்ளும் பொழுது***
***செறிதொடி உள்ளம் உவப்ப -***
***மதியுடை வலவ! ஏமதி தேரே''***

***(முல்லை - 487)***

என்ற பாடலடிகளில் அறியலாம்.

**வரவுச் சிறப்புரைத்தப்பத்து**

வினை முடித்து வெற்றியுடன் வீடு திரும்பும் தலைவனின் வரவைச் சிறப்பாகத் தோழி தலைவிக்குக் கூறும் தொகுதியாகும். இதனை,

***''பேரமர்க் கண்ணி நிற்பிரிந்துறைஞர்***
***தோள்துணை யாக வந்தனர்''***

***(முல்லை - 496)***

என்ற பாடலடிகளால் அறியலாம்.

**முடிவுரை**

முல்லை நிலத்தின் உரிப்பொருள், கருப்பொருள்கள் ஆகியனவும், ஐங்குறுநூற்றில் முல்லை நிலப்பாக்களின் பருவங்கள் பற்றியும், அப்பருவங்களில் வாழும் மக்களின் செயல்பாடுகள் மற்றும் பண்பு நலன்களைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரையின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

**துணைநூற் பட்டியல்**

1. ஐங்குநூறு - நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41 - பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 98
2. ஐங்குநூறு (முல்லை) - ஸ்ரீசெண்பகா பதிப்பகம் 32 - டீ, கிருஷ்ணா தெரு, பாண்டி பஜார், சென்னை -17
3. திருக்குறள் - த ராமன்ஸ் புக் 25, நான்காவது மெயின் ரோடு சென்னை20
4. குறுந்தொகை - முல்லை நிலையம் 9, பாரதிநகர் முதல் தெரு, தி.நகர், சென்னை - 108.